Anode Fabricators Pvt Ltd
Innovation In Inert Metals
MMO, Platinized Ti & Nb Anodes

#48, Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 22781149/1150 Fax: 22781362 Email: info@tianode.com Web: www.tianode.com

# Inter-Organizational News Letter - September 05

## MAN OF THE MONTH



Mr. G. Elumalai
Production – Jig development for spooling

## FORECASTING 05-06

| | |
|---|---|
| Turnover | : 125% ↑ |
| Employment | : 25% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Modernization | : in coating Plant → |
| Rejection growth | : 100% ↓ |

## TESTIMONIALS

**Customers:**

Up to June 05 : 142 Nos
Up to July 05 : 145 Nos

**Performance: July 05**

Turnover growth : 30.37%
Employment growth: 01.63% ↓
100% Attendance : 20%

## KEY PERSONS

| | |
|---|---|
| M.P.V. Jaykumar | - CEO. |
| RM. Ravi Chandran | - Marketing. |
| T. Ramesh | - Stores & Purchase. |
| T. Amaladhas | - Plating. |
| N. Murugan | - Production. |
| C. Sounder Suresh | - Out Sourcing. |

## MANAGEMENT

| | |
|---|---|
| Ms. P.E. Nancy | – Director |
| Mrs. J. Vanajambika | – Director |

## ACHIEVEMENT




## உழைப்பின் உயர்வு!

முதல் மூன்று வருடங்களைக் கடந்து நான்காவது ஆண்டை வெற்றிகரமாக துவங்க உதவிய எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன். நன்றி பல அவர் பாதம் படைக்கிறேன். மற்றும்

தளரா உள்ளம், தாழ்ச்சியுள்ள மனங்கள், உழைக்கும் கரங்கள்,
தோழமைக்குத் தோள் கொடுக்கும் இதயங்கள் நீங்கள் –

முயற்சியின் இருப்பிடங்கள், அன்பின் உறைவிடங்கள்
இயங்கிடும் இயந்திரங்களை இலகுவாய் இயக்கிட கற்றவர்கள் நீங்கள் –

உண்மை நண்பர்கள் – எம் தொழிற்கூடத்திற்கு!
உண்மையானவர்கள் – புகழுரையல்ல!
உள்ளம் நிறை அன்போடு உவந்து அளிக்கும் வார்த்தைகள்.

முயற்சிக்குத்தான் வெற்றி சொந்தம் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். தோல்வியைக் கண்டு சோர்ந்து விடாமல், எங்கள் தோளுடன் தோளாய், தோழர்களாய் துணைநிற்க்கும் உங்களுக்கு நன்றி மட்டும் போதாது, என்றும் நலமுடன் வாழ உள்ளம் நிறைந்த மனதோடு வாழ்த்துகிறேன்.

கடமையைச் செய்யும் போது கடவுள் தரும் அருள் என்றும் நம் அனைவரோடும் இருக்க இறைவனை அனுதினமும் வேண்டுகிறேன்.

நீங்கள் தரும் ஒத்துழைப்பு என்றும் தொடர, உம் பணி சேவை நாளும் வேண்டி, நன்றியுள்ள மனம் உடையவராய், நன்றிகள் பல கூறிக் கொள்கிறேன்.

Ms. P. E. Nancy
Director - Admin

**********

## ஏழாண்டு காலம் என் காதுகளில் ஒலித்த குறள்

### (மாண்புமிகு குடியரசுத்தலைவர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம்)

இந்தியாவின் செயற்க்கைக் கோளை விண்ணில் ஏவும் ராக்கெட்டை சொந்தமாக இந்தியாவிலேயே வடிவமைத்துக் கட்டுமானம் செய்வது பெரும் பொறுப்பாகும். அத்திட்டத்தை வழிநடத்தி நிறைவேற்றும் பொறுப்பை என்னிடம், என்னுடைய ஆசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் சதீஸ் தவான் கொடுக்கும் போது அவர் சொன்னார்,

“கலாம், நாம் எந்தப் பணியையுமே செய்யாமல் இருந்தால் எந்த சிக்கலும் இல்லை. ஆனால் ஏதாவது ஒரு குறிக்கோளை முனைப்பாகக் கையில் எடுத்துக்கொண்டு, அதை நிறைவேற்ற முற்பட்டால் அக்குறிக்கோளை அடைவதற்க்குள் பல இடையூறுகளும், சிக்கல்களும் தோன்றும்.. ஆனால் அந்த இடையூறுகளும், சிக்கல்களும் நம்மை ஆக்கிரமித்து, நம்மை வழிநடத்திச்செல்ல நாம் அனுமதிக்கக்கூடாது. மாறாக, அந்த சிக்கல்களைச் சமாளித்து அதைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நாம் விரும்பிய குறிக்கோளை, இலக்கை அடைதல் வேண்டும்” என்றார்.

... 2

## FUNCTIONAL WISHES



**Ganesh Chaturthi – September 07**

Best Wishes by Staff Members.

## EXTERNAL SUPPORT

Banking : M/s. United Bank of India
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Advisers : 1] Lr. M.K. Govindan.
2] Lr. V. Benedict Vincent.
Software : M/s. IndSys Technologies

## கவித் தென்றல்

**கதிரவன்**

கடல் பிளந்து எழுவான் – ஆலய
    கடவுள் ஒன்று ஆவான்
அகில மலர்களை மலரச்செய்து – அதில்
    அருஞ்சுவை மதுவை மறைப்பான்
உலக உயிர்களின் நலனுக்கே – ஒளியாவான்
    அவன் மறைந்த பிறகும் நிலவினிலே
மண்ணைப் பிளந்து மறைந்தவன் – காலையில்
    மறுபடியும் எழுவான் கடலிலே
முடிந்து போகும் வாழ்க்கையிலும் – நாம்
    என்றும் முளைத்து வரலாம் சூரியானாக

– செ. ரஞ்சித்.
Erection & Commissioning

## OLD IS GOLD

My grandfather once told me that there were two kinds of people, those who do the work and those who take the credit. You should be in the first group. Because there was no competition.

Mr. M. Suyambu

## BIRTH DAY WISHES

Mr. C. Baskaran
Purchase - September 01

Master S. Aswith Kumar
S/o. K. Suresh Kumar - September 11

Master Yuvaraj
S/o. G. Ezhumalai - September 17

Mr. K. Suresh Kumar
Production - September 19

**எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே!**
**அவை நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பினிலே!!**

**Best Wishes by, Staff Members.**

என்ன ஆழமான அறிவுரை! எனக்கு ஒரு வாழ்க்கைக் கல்வியாக என்னை நானே உணர்ந்து, உய்விக்க வந்த அறிவுரை. எனக்கு ஒரு திருக்குறள் நினைவுக்கு வந்தது. இந்த அற்புதமான லட்சியக்கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் எவ்வளவு அழகாக இரண்டே வரிகளில் சொல்லியிருக்கிறார் தெரியுமா?

**இடும்பைக்கு இடும்பைப் படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பைப் படாஅ தவர்**

அதாவது, "ஒருவர் எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் அந்தப் பணியில் ஆங்காங்கே சிக்கல்கள் எதிர்படும். ஆனால், துன்பத்தைக்கன்டு துவளாதவர்கள், சிக்கல்கள் தமக்கு தலைமை தாங்கி வழி நடத்தாமல், அந்த துன்பங்களுக்குத் துன்பம் கொடுத்து வாழ்வில் வெற்றியடைவர்".

இந்த அறிவுரை, அந்த திட்டத்தில் நான் கடுமையாக, உழைத்த ஏறக்குறைய ஏழாண்டு காலம் முழவதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டு ஒரு உறுதுணையாக அமைந்தது.

**********

## இதயங்களே விழாதீர்கள்

காற்று மோதி
    எந்தப் பறவையும் காயமாவதில்லை!
வண்டுகள் மோதி
    எந்த மலரும் சேதமாவதில்லை!
இலைகள் மோதி
    எந்தக் கிளையும் முறிந்துப்போவதில்லை!
அலைகள் மோதி
    எந்தக் கடலும் கலங்கிப்போவதில்லை!
பனித்துளிகள் மோதி
    எந்தப் புல்லும் முறிந்துப்போவதில்லை!
மனிதனே நீ மட்டும்
    துயரங்கள் மோதி ஏன் துவண்டு போகின்றாய்...?

படித்து ரசித்தவர் Mrs. Vanajambika Jeyakumar
Director

**சிரிப்பு என்பது சூர்யோதயம். ஒரு நாளுக்கு வேண்டிய வெளிச்சத்தை அது வழங்குகிறது.**
**– ஜார்ஜ் சன்டன் யா**

**********

## மகிழ்ச்சி

மகிழ்ச்சியான நேரங்களில் தான் மனிதன்
அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்கிறான்

– ஜான் மேஸ்ஃபீல்ட்





**3rd Staff Day**

&





**Sports Celebration**